*1995 ஏப்ரல் 26*]

விலையை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் இந்த மாமன்றத்திலே, கொச்சியிலே உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்திலே நம்முடைய கோரிக்கையை வைத்திருக்கிறேன். கேரள மாநிலத்திலே இருப்பதைப்போல கொப்பரைக்கு எப்படி ஒரு அடிப்படை விலை நிர்ணயம் செய்கிறார்களோ, அதேபோன்று தமிழகத்திலும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். அவர்களும் இணக்கமான பதிலை தந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *453,* திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**453—**

**தலைவாசல் ஒன்றியத்தில் விதை உற்பத்தி மையம் ஏற்படுத்துதல்**

**45604*—**திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் ஒன்றியத்தில் கால்நடைத்துறையிடம் உள்ள இரண்டாயிராம் ஏக்கர் நிலத்தில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் மூலம் விதை உற்பத்தி மையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் பகுதியிலே உள்ள இந்த நிலம் விவசாயிகளின் கால்நடைகளை மேய்ப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது

கால்நடைகளை மேய்க்க அனுமதிப்பது இல்லை. அந்த நிலம் வெறுமனே கிடக்கிறது. பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. எனவே இந்த நிலத்தை வேளாண்மைத் துறை எடுத்துக்கொண்டு விதை உற்பத்தி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் கால்நடை துறையினுடைய பராமரிப்பில் இருக்கிறது. இருப்பினும் அங்கு கால்நடை தீவனப் பயிர்களுக்கு அங்கே அந்தப் பண்ணை அமைக்கப்பட்டது. அங்கே விதைகள் விதைக் குச்சிகள் இன்றைக்கு அங்கே தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவேதான் வேளாண் பல்கலைக் கழகம் எடுத்து விதை உற்பத்தி செய்யக் கூடிய பண்ணையாக மாற்றுவதற்கு திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற அந்த இடம் சேலம் மாவட்டத்தில் 3 ஆயிரம் ஏக்கர் நிலமும், தென்னார்காடு மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கர் நிலமும், அதாவது சின்னசேலம் தொகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அமைச்சர் குறிப்பிட்ட அந்தத் திட்டங்களுக்கு 500 அல்லது ஆயிரம் ஏக்கர் எடுத்துக்கொண்டால் மீதி 4000 ஏக்கர் நிலம் வெறுமனே பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. அந்த இடத்தை வேளாண்மைத்துறை பயன்படுத்தி வேளாண்கழகம் மூலம் விதை உற்பத்தி மையம் ஏற்படுத்தி அல்லது வேறு வகையில் அந்த நிலத்தை பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதை உற்பத்தி மையம் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால் நிலம், நிலத்தினுடைய தன்மை, நீர் இருப்பு இவைகளையெல்லாம் ஆராய வேண்டும். அந்த இடத்தில் நிலம் தரிசாக கிடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் இது குறித்து கால்நடைத் துறை அமைச்சரிடத்திலே பேசி இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 454, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS